(4A)

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 22/93 (VI)

என இல. EST-7/COMPT/02/2003-1
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2017.10. 16

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>கடமையிலீடுபட்டிருக்கும் போது காயங்களுக்குள்ளாகும் அரசாங்க அலுவலர்களுக்கு நட்டஈடு வழங்குதல்.</u>**

மேற்படி விடயம் குறித்து 1993.09.21 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 22/93 மற்றும் அதன் திருத்தமாக வெளியிடப்பட்ட அனைத்து சுற்றறிக்கைகள் தொடர்பாகவும் உங்களம் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 22/93 ஐ திருத்தியமைத்து வெளியிடப்பட்ட 2005.05.04 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 22/93 (III) குறிப்பிடப்பட்டுள்ள கீழேயுள்ள கடமை வேளையின் போது மாத்திரம் நேரிடுகின்ற விபத்துக்கள் காரணமாக அரசாங்க அலுவலர் ஒருவர் மரணமடைய நேரிட்டால், அவ் அலுவலர் மரணிக்கும் போது வகித்த தரத்தில் இருந்து அடுத்துள்ள உயர் தரத்திற்கு மரணமடைந்த தினத்தில் இருந்து பதவியுயர்த்தப்படும் என 2017.07.18 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

i. தனக்குரிய கடமையை நிறைவேற்றும் போது
ii. கடமையை மேற்கொள்ளாத போது கூட தனது சாதாரண கடமை விடயம்சார்ந்த வரையறைக்குள் ஏதேனும் பணியொன்றை மேற்கொள்ளும் போது
iii. தனது கடமையை மேற்கொள்ளும் போது ஏதேனும் செயற்பாடொன்றின் விளைவாக
iv. சேவைத்தலத்தில் ஒரு கடமையை மேற்கொள்வதற்காக செல்லும் பயணத்தில் அல்லது சேவைத் தலத்தை நோக்கி வரும்போது.

03. இப் பதவியுயர்வு ஒரு தரமுயர்வாக மாத்திரம் ஏற்புடையதாகும்.

04. இச் சுற்றறிக்கை ஏற்பாடுகள் 2017.07.18 ஆந் திகதியில் இருந்து அமுல்படுத்தப்படும்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு